# THE MORNING STAR

*Registered as a Newspaper.* ( Established 1841 ) Published Every Friday

Vol. 137 JAFFNA. FRIDAY, 29TH JULY, 1977. No. 28

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


## Ourselves

We regret very much that circumstances beyond our control have prevented us from publishing the issue of the Morning Star of the 22nd inst. We hope that our readers and subscribers will bear with us in this failure.

THE MANAGER

## Jaffna College Junior Athletic Meet

The Jaffna College Junior School Inter House Athletic Meet was held on Friday, 1st inst., at 3-00 p. m. in the Bicknell Field under the distinguished patronage of Mr. A. C. Canagarajah, Engineer, Walkers Ltd., Colombo, and Dr. Mrs. Canagarajah.

Keen competition prevailed among the Houses. Brown House emerged Champions for the 7th year in succession. Abrahams came second followed by Hastings and Hitchcock.

The following were declared champions:

Boys Over 11 — Roy Thevathayalan
Boys Under 11 — Balashankar Das
Girls Over 12 — Gajani R.
Girls Under 12 — Jeyanthy R.

The Head of the Junior School, Miss M. S. Elias, welcomed the guests. Prizes were distributed by Mrs. Canagarajah. Mr. Canagarajah, in his speech, referred to the great tradition of Jaffna College and its many old students who reflect its glory in many parts of the world.

He commended the students on their enthusiasm, performance and their united effort in competition, upholding the ideals of Sports. He exalted the students to play their part in a similar way to form a united society living in harmony in one country.

## GENERAL ELECTION RESULTS

### Position of Parties

| | | |
|---|---|---|
| U. N. P. | 139 | seats |
| T. U. L. F. | 17 | ,, |
| S. L. F. P. | 8 | ,, |
| C. W. C. | 1 | ,, |
| Independent | 1 | ,, |

### T. U. L. F. Results

We are publishing below only those that won the elections, with those who became second and the majority secured by the winners:

1—KAYTS

| | |
|---|---|
| Mr. K. P. Ratnam | 17,640 |
| Mr. V. Navaratnam | 8673 |
| Majority | 8967 |

2—VADDUKODDAI

| | |
|---|---|
| Mr. T. Thirunavukarasu | 23,384 |
| Mr. A. Thiyagarajah | 5176 |
| Majority | 18,208 |

3—KANKESANTURAI

| | |
|---|---|
| Mr. A. Amirthalingam | 31,156 |
| Mr. S. Sritharan | 5323 |
| Majority | 25,833 |

4—MANIPAY

| | |
|---|---|
| Mr. V. Dharmalingam | 27,550 |
| Mr. R. S. Aloysius | 3300 |
| Majority | 24,250 |

5—KOPAY

| | |
|---|---|
| Mr. S. Kathiravelpillai | 25,840 |
| Mr. V. Nadarajah | 3487 |
| Majority | 22,353 |

6—UDUPPIDDY

| | |
|---|---|
| Mr. T. Rajalingam | 18,768 |
| Mr. R. R. Dharmaratnam | 4021 |
| Majority | 14,747 |

7—POINT PEDRO

| | |
|---|---|
| Mr. K. Thurairatnam | 12,989 |
| Mr. N. Nadarajah | 6419 |
| Majority | 6570 |

8—CHAVAKACHCHERI

| | |
|---|---|
| Mr. V. N. Navaratnam | 20,028 |
| Mr. V. Kumarasamy | 10,810 |
| Majority | 9218 |

9—NALLUR

| | |
|---|---|
| Mr. M. Sivasithamparam | 29,858 |
| Mr. K. Ramanathan | 1721 |
| Majority | 28,317 |

10—JAFFNA

| | |
|---|---|
| Mr. V. Yogeswaran | 16,251 |
| Mr. G. G. Ponnambalam (Kumar) | 6960 |
| Majority | 9291 |

11—KILINOCHCHI

| | |
|---|---|
| Mr. V. Anandasangari | 15,607 |
| Mr. C. Kumarasuriar | 4006 |
| Majority | 11,601 |

12—MULLAITIVU

| | |
|---|---|
| Mr. S. M. Sellathambu | 10,361 |
| Mr. P. Chandrasekari | 7632 |
| Majority | 2629 |

13—MANNAR

| | |
|---|---|
| Mr. P. S. Soosaithasan | 15,141 |
| Mr. M. S. Abdul Rahim | 12,929 |
| Majority | 2212 |

14—VAVUNIYA

| | |
|---|---|
| Mr. T. Sivasithamparam | 13,831 |
| Mr. K. T. Pulendran | 9444 |
| Majority | 4377 |

15—TRINCOMALEE

| | |
|---|---|
| Mr. R. Sampanthan | 15,144 |
| Mr. V. R. Navaratnarajah | 11,823 |
| Majority | 3321 |

16—PADDIRUPPU

| | |
|---|---|
| Mr. P. Ganeshalingam | 15,877 |
| Mr. N. Sivagurunathan | 5633 |
| Majority | 10,245 |

17—BATTICALOA

| | |
|---|---|
| Mr. C. Rajadurai (1st Member) | |
| Majority | 1303 |

18—NUWARA ELIYA — MASKELIYA

| | |
|---|---|
| Mr. S. Thondaman (3rd Member) | |
| Majority | 32,117 |

The TULF lost in the following places:

Puttalam, Muthur, Samanthurai, Kalkudah and Kalmunai.

*Memorandum to the Political Leaders & All People of Good Will*

## On Plantation Workers

In October 1975, the Sri Lanka Plantation Workers became the Government's Servants and collaborators.

No one can forget that the 75 per cent of the foreign exchange comes to the country from tea, rubber and their workers.

The heritage of the colonial system has left them *isolated in 'Line-rooms'*, with a mentality of quasi-slavery, with little freedom and few rights.

Working in their midst, knowing by experience their plight, aware of the exploitation and the oppression to which they are subjected, a few, socio-religious workers thought it was their duty, on the eve of the general elections, to become the "*Voice of the Voiceless Plantation Workers*" and to present **to the leaders of the Sri Lanka's political parties** the following request:

1. As the Sri Lanka Plantation Workers contribute so much to the economy of the country, they need to develop a more patriotic sense of nation-building, and they must be helped to feel themselves as an integral part of the people of the country. *The process of integration* of the Plantation Workers with the Villagers and of the Villagers with the Plantation Workers must be delicately and sensibly brought about. It will be the chief responsibility of the majority community to implement the programme of integration.

2. *In justice and fair play*, the Plantation Workers must be offered *the same rights and privileges* as the villagers. *Hence* (a) it is imperative that, without any further delay, the following *discriminatory practices* against them *be abolished*:

(i The rule of the Medical Ordinance of 1912, demanding that the Plantation Workers should not be admitted to the Government Hospitals unless they produce letter-permit from the Superintendent or Dispenser and obliging the Superintendent to pay Rs. 3-50 per day (by the Amendment of 1975.)

(ii) The special system of food ration token cards for the Plantation Workers. Let *the same Co-operative system* be extended to the Plantation Workers and let them be offered the same food, cloth, rations offered to the others.

iii) The antiquated system of D. T. (Discharge Ticket) which subjects the Plantation Workers to a great amount of exploitation and useless sufferings.

*(Contd. on last page)*

## ON ECONOMIC THEORY

I am emboldened to write a reply to the above article in the Morning Star of 8th July, because the writer himself (who, I suspect, is an eminent theologician) is no more qualified to propound at economic theory, however eminent he may be in his own calling.

The Director of the Technical Institute was addressing his audience on the effect of his own graduates leaving Ceylon after obtaining their diplomas. What he said was in relation to the situation as it exists today, and is likely to be, over the next years when his products return to Ceylon. He had stated, and it appears in his written report, that as far as capital goes "the banks are now being very helpful". So there is no difficulty about capital. In what other way can money brought in be useful? If it comes from abroad, it can be useful as foreign exchange. But in this, Jaffna is not in a position to exercise control.

There is no doubt, as every individual knows, that the money, which comes, is welcome to him. This is because he can use it to have the good material comforts that every body likes to enjoy. So he uses the money either to put it into a banking institution (which, as mentioned earlier, has already enough money to provide the capital) or else buys goods produced by the people here, and in doing so is in a position to pay a higher price. The producer sells at the higher price thinking that he is doing well. But he will, in the end, have to pay for all his own needs, a higher price, and as a result is not better off but progressively worse. It is only production that can give real abundance.

For this to happen people must have the know-how, and the area has to be developed with the necessary infrastructure and other facilities.

18-7-77. *S. R.*

## IN MEMORIAM

**Caroline Thiraviam Jeyarajah**

who left these shores on 22nd July, 1968

Affectionately remembered by her dear husband and children.

*"Her children arise up, and call her*
*Blessed; her husband also, and he praiseth her.*
*Many daughters have done virtously,*
*But thou excellest them all."*

Chavakachcheri,
22nd July, 1977.

# உதயதாரகை
**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 137 ] 29 — 7 — 1977 [ இதழ் 28


## தேர்தலைத் தொடர்ந்து........

இலங்கைக் குடியரசின் முதலாவது பொதுத் தேர்தல் முடிவடைந்தது. ஒரு புதிய அரசு அதிக சீக்கிரத்தில் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்கப் போகிறது. எந்தவொரு தேர்தலைத் தொடர்ந்தும் நாலு சாராரை நாம் காணலாம் — ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சியினர், தோல்வி கண்ட வேட்பாளர், தேர்தலில் ஒரு முக்கிய பங்கையெடுத்த சாதாரண வாக்காளர்.

நாடு சுதந்திரமடைந்த காலமுதல் இன்றுவரை மாறி மாறி ஆண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சியென்றாலென்ன; தனித்தனியே முன்பு விட்ட வேட்பாளரை விடக் கூடிய தொகையினரை ஒரு கூட்டணியாய் இந்த முறை போட்டிக்கு விட்ட இடது சாரிக் கூட்டணி என்றாலென்ன — இவை யாவும் புதிய புதிய திட்டங்களையும், கொள்கைகளையும் முன்வைத்தே இப்போட்டியிற் குதித்தன. வேட்பாளரும் நாட்டின் நன்மை கருதியே தாம் போட்டியிற் சேர்வதாக உறுதி கூறினர் சொல்லப் போனால், தீதான காரியங்களை முன்வைத்துத் தேர்தலிற் போட்டியிட யார்தான் துணிவு கொள்வர்? மகிமையான காட்சிகளைத்தான் முன்வைப்பர். மகத்துவமான காரியங்களைத் தான் தாம் செய்து முடிக்கப் போவதாக வாக்களிப்பர்.

கட்சிகள் யாவும் இப்பேர்ப்பட்ட மகிமையான காட்சிகளை முன் வைத்துப் போட்டியிடினும், சுயேச்சையாகக் கணக்கற்றோர் இவ்வுறுதி மொழிகளைக் கூறித் தேர்தலிற் குதித்திடினும், கட்சி ஒன்றே ஆட்சியமைக்கும்; வேட்பாளரிற் சிலரே வெற்றி பெறுவர் இதுவே நியதி. எழும் கேள்வி எதுவெனில் — வெற்றியைத் தொடர்ந்து வெற்றி பெறுவோரின் நிலையென்ன? இனனுமோர் ஐந்தாண்டு உண்டு. வருவதை வரும்போது பார்ப்போம் என வாளாவிருந்து, போட்டிருந்த திட்டங்களை மறப்பார்களா? அல்லது வாக்குறுதிகள் யாவையும் நிறைவேற்றத் தம்மாலானதைச் செய்வார்களா? பயமுமின்றிப் பாரபட்ச சிந்தையுமின்றி நீதியும் நியாயமும் நிலைக்கச் செய்வார்களா? சமாதானமும், செழிப்பும் உண்டாக உழைப்பார்களா? ஆட்சியேற்கும் இப் புதிய கட்சியினரும், ஆட்சி மன்றத்தில் அங்கத்துவம் வகிக்கப் போகும் மற்றையோரும் இதைத் தம் மனதிற் கொள்வார்களெனவே நம்புகிறோம்.

எதிர்க் கட்சியினரின் நிலை என்ன? போட்டியின் காலத்தில் நாட்டின் நன்மையே தம் நோக்கமெனப் பறை சாற்றியவர்கள், இனி மேல் தாம் வெற்றி பெறும் வரை இந்த நன்மையைத் தேடாதிருப்பரா? பிறகட்சி வெற்றி பெற்றதால் நாட்டின் நன்மையை மறந்திருப்பரா? இல்லையேல் ஆட்சிபுரியும் கட்சி எதுவரினும் தமசேவை சேவையெனக் கொண்டு பூரண ஒத்துழைப்புடன் கடமையாற்றி நாடு வளரச் செய்வார்களா? எதிர்க்கட்சியாதலால் எதிர்ப்பதே தம் இலட்சியமெனத் தீமையோடு நன்மையையும் எதிர்த்து நாட்டின் முன்னேற்றப் பாதையில் முட்டுக் கட்டைகள் போடுவரா? இல்லையென நம்புகிறோம். ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் சுயநலச் சிந்தையற்றுச் செயலாற்ற முன்வர வேண்டும். இதையே வாக்காளர் — இந்நாட்டு மன்னர் — இவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது.

தோல்வியுற்ற வேட்பாளரும் செய்ய வேண்டிய பங்குண்டென இடித்துரைக்க வேண்டியதில்லை. நாட்டின் நலன் குறித்துப் பேசிய இவர்கள் ஆட்சிமன்றத்தமராதிருப்பினும் பொதுவான நாட்டுப் பணியிலும், சமுதாய சேவையிலும் ஈடுபட்டு நாட்டின் நலனைப் பேணிக் கொள்வதவசியம். அதையே தியாகசிந்தையெனபோம் இந்த நாட்களில் நம் நாட்டிற்கு அத்தியாவசியமான ஒரு தேவை இது என யாவரும் ஒப்புக் கொள்வர்.

"கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்" என்பது வேதவாக்கு. ஆகையால் பூமி அசையாதபடி நிலைபெற்றிருக்கிறது. ஆட்சி புரிபவர் ஆட்சி புரிவதும், அவர்களை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவோர் அவர்களைத் தெரிந்தெடுப்பதும் அவர் மாட்டு நாம் செய்யும் கருமங்களே தவிர வேறல்ல. அதை நாமனைவரும் மனதிற் கொள்வோமானால் நாட்டில் சந்தோஷம், சமாதானம், செழிப்பு உண்டாகும் என்பதற்கையமில்லை

### செய்திகள்

## ஆதீனத்தின் பிள்ளைகள் விழா

தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தின் பிள்ளைகள் வாரம் இம் மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை ஆதீனத்தின் எல்லாச் சபைகளிலும் கொண்டாடப்பட்டது. 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிள்ளைகளுக்கான விசேட ஆராதனைகள் எல்லாச் சபைகளிலும் நடத்தப்பட்டன. பிள்ளைகளே இந்த ஆராதனையை நடத்தினர் "உங்கள் கனிகளினுல் அறியப்படுவீர்கள்" என்ற பிள்ளைகள் வாரத்தின் மகுட வாக்கியத்தில் விசேட பிரசங்கங்களும் செய்யப்பட்டன. எல்லாச் சபைகளிலும் பல பெரியோரும் இந்த ஆராதனையிற் சமுகமாயிருந்து சிறப்பித்தனர். வாரத்தில் சபை விழாக்களும், விளையாட்டுப் போட்டிகளும் பல சபைகளிலும் நடத்தப்பட்டன.

இவ்வாரத்தின் கடைசி நாளாகிய சனிக்கிழமை 16 ஆம் திகதியன்று, எல்லாச் சபைகளுக்குமான பிள்ளைகள் விழா அதிக விமரிசையாக நவாலியில் நடத்தப்பட்டது. முழுநாட் கொண்டாட்டமாக நடத்தப்பட்ட இவ்விழாவில் எழுநூற்றைம்பது பிள்ளைகளும், முந்நூறுக்கு மேற்பட்ட பெரியோரும் சேர்ந்து கொண்டனர். விழாவைத் தொடக்கி வைத்த ஆரம்ப ஆராதனை நவாலிச் சபைப் பிள்ளைகளினுல் மிகப் பக்தியூட்டும் முறையில் நடத்தப்பட்டது செல்வன் C. யோகநாதன் ஆராதனையை நடத்த செல்வி வதனி அருளானந்தம் "உங்கள் கனிகளினுல் அறியப்படுவீர்கள்" என்ற விடயத்தில் கருத்து மிக்க செய்தி ஒன்று வழங்கினர். இதற்கெனத் தயாரிக்கப்பட்ட விசேட ஆராதனை ஒழுங்கு உபயோகிக்கப் பட்டது. பிள்ளைகள், பெரியோர் யாவரும் மிகுந்த உற்சாகமாய் இவ்வாராதனையிற் பங்கெடுத்தனர்.

நவாலிச் சபையினர் உவந்தளித்த குளிர்பான இடைவேளையின் பின் பிள்ளைகளுக்கான பாட்டுப் போட்டிகள் திருமதி A. ஆசீர்வாதம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன. இதற்காகப் பயிற்றப்பட்ட பாட்டுகளில் இரண்டு பிரிவுகளாகச் சபைகள் பங்குபெற்றனர் சென்ற ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை பாட்டுத் திறன் உயர்ந்திருப்பதாகவும் இதையிட்டுச் சபைகள் பாராட்டப்பட வேண்டுமென்வும் பாட்டுப் போட்டிகளின் மத்தியஸ்தர் அபிப்பிராயம் தெரிவித்தனர். இப்போட்டிகளில் பின்வரும் வகையில சபைகள் தராதரப் பத்திரம் பெற்றன:

முதலாம் பிரிவு — முதலிடம்: வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை ஏழாலை வடக்கு.

இரண்டாம் இடம்: ஏழாலை தெற்கு, பண்டத்தெருப்பு, உடுப்பிட்டி, நுணுவில்.

மூன்றும் இடம்: சாவகச்சேரி, நவாலி.

இரண்டாம் பிரிவு — முதலிடம்: காரைநகர், ஆளவெட்டி.

இரண்டாம் இடம்: அச்சுவேலி.

மூன்றும் இடம்: சங்கானை.

மதிய போசன இடைவேளை நேரத்தில் பல சபைகளினுலும் கொண்டுவந்து பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பிள்ளைகள் கைவேலை, பாட உபகரணங்கள் உட்பட்ட பொருட்களைப் பிள்ளைகளும், பெரியோரும் பார்த்து ரசித்தனர். ஏராளமான பொருட்கள் மிகவும் திறமையான முறையில் தயாரிக்கப்பட்டவையாய் இருந்தது பாராட்டுக்குரியவொரு காரியம்.

இடைவேளையின் பின் சபைகளின் நானாவித நிகழ்ச்சிகள் திருமதி C. J. இராயதம்பி அவர்களின் தலைமையில் நடைபெற்றன. தெல்லிப்பழைச் சபையின் சங்கீத வழிபாட்டு நிகழ்ச்சி, பண்டத்தெருப்பு, காரைநகர், உடுவில் சபைகளின் நடன நிகழ்ச்சிகள், மானிப்பாய், உடுவில் சபைகளின் நாடகங்கள், வட்டுக்கோட்டைச் சபையின் வாத்திய இசை நிகழ்ச்சி ஆகியவை இவ்வேளையில் இடம் பெற்றன. இவற்றின் தரம் மிக உயர்ந்து காணப்பட்டதாகவும், பிள்ளைகள் மிகக் கரிசனையுடன் ஆயத்தம் செய்து மேடையேற்றியுள்ளனர் எனவும் இந்நிகழ்ச்சிகளைப் பற்றிப் பலரும் பாராட்டினர்.

1976 ஆம் ஆண்டு நடந்த ஓய்வு நாட் பாடசாலைப் பரீட்சையிலும் இவ்வருடப் பிள்ளைகளின் விழாவையொட்டி நடத்தப்பட்ட வேத அறிவுப் போட்டியிலும் திறமைச் சித்தியெய்திய பிள்ளைகளுக்கான பரிசுகளும் இவ்விழாவில் வழங்கப்பட்டன. இவற்றின் விபரம் வேறிடத்தில் கொடுக்கப்படுகிறது.

விழாவின் முடிவு ஆராதனை ஏழாலை வடக்குச் சபையின் பிள்ளைகளால் பக்திவிநயத்துடன் ஒரு நவீன முறையில் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள் செபம் செய்து ஆசீர்வாதம் கூறினார்கள்.

கடைசி நிகழ்ச்சியாக, விழாவிற் குழுமியிருந்த அனைவரும் மேள வாத்தியங்களுடன் சுமார் 1½ மைல் வழியாக ஒரு சாட்சியின் பவனி நடத்தி வந்தனர். பிள்ளைகள் யாவரும் தமது ஓய்வு நாட் பாடசாலைக் கொடியின் கீழ் வரிசையாகப் பவனி சென்றதும், ஏராளமான பெரியோர் அவர்களுடன் சேர்ந்து வந்ததும் பரவசமூட்டும் ஒரு காட்சியாயமைந்தது. பவனி சபை வளாகத்தைத் திரும்பி வந்தடைந்ததும் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. யாழ். ஆதீனத்தின் பிள்ளைகள் வார நிகழ்ச்சிகள் இவ்வாறு வெற்றியுடன் முடிவடைந்தன.

## ஞான ஒடுக்கக் கூட்டம்

தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தின் பெண்கள் ஐக்கிய சமாசத்தினுல் ஆதீனச் சபைகளின் பெண்கள் ஐக்கிய அங்கத்தினர்க்காக ஒழுங்கு செய்யப்பட்ட ஞான ஒடுக்கக் கூட்டம் சென்ற மாதம் 18 ஆம் திகதி மருதனார் மடத்திலுள்ள பெண்கள் நிலையத்தில் நடத்தப்பட்டது. இந்த முழுநாட் கூட்டத்தில் சுமார் 70 அங்கத்தவர்கள் பங்குபற்றினர்.

இலங்கைத் திருச்சபையின் யாழ்ப்பாணத்துப் பிரதம குரு வண. J. J. ஞானப்பிரகாசம் அவர்கள் இக் கூட்டத்தை நடத்தி மூன்று சிறப்புரைகள் வழங்கினார்கள். தமது முதலாவது சிறப்புரைக்கு பரி. யோவான் 1 : 14 ஆம் வாக்கியத்திலிருந்து "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்ற பகுதியை ஆதாரமாகக் கொண்டு, இயேசு உலகத்திலே ஒரு மனித குடும்பத்தில், ஒரு மனிதனுகப் பிறந்ததினுல் மனிதனின் நிலையே புதியவோர் அந்தஸ்தைக் கண்டது என்றார்கள். இயேசுவின் வருகையினுல் ஏற்பட்ட மாற்றங்களில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதும், பெண்களின் அந்தஸ்து உயர்த்தப்பட்டதும் இரண்டு விசேஷமானவை எனவும், மனிதனை எல்லா வகைகளிலும் மீட்பைப் பெற்றுக் கொண்டது "இம்மானுவேல்" காலம் நிறைவேறிய போது உலகத்தில் வந்ததினுல் எனவும் எடுத்துக் காட்டினார்கள்.

தமது இரண்டாவது உரையில் கிறிஸ்தவ குடும்பத்தின் தன்மைகளைக் குறித்துப் பேசிய வண. ஞானப்பிரகாசம் அவர்கள் "ஏன் ஜெலுஸ்" எனத் தலையங்கம் இடப்பட்ட ஒரு படத்தை விவரித்து அதிலே கிறிஸ்த குடும்பத்தில் அவசியம் காணப்பட வேண்டிய வேலை வேண்டுதல், அன்பு, ஆகிய மூன்று குணுதிசயங்கள் காணப்படலாம் என்றார்கள். இயேசுவின் 12 ஆம் வயதுக்குப் பின் யோசேப்பைக் குறித்து எதுவும் கூறப்படுவதை நாம் காணவில்லை. அவர் மரித்திருக்கக் கூடும். அப்படியெனில் குடும்பத்தின் முதற் குமாரனுக இயேசுவே தமது முப்பதாம் வயது வரையும் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றிருப்பார். தமது நாளாந்த வேலையையும் கடவுளின் சேவையாகவே அவர் கருதினுர்.

ஒரு கிறிஸ்த குடும்பத்தில் செப சீவியம் அவசியம். கடவுளோடு ஐக்கியத்தில் இருக்கும் ஒரு வாழ்வை எல்லாக் குடும்பங்களும் கொண்டிருந்தால் அவருடைய சித்தத்தைச் செய்வதே தமது பாக்கியமெனக் காண்பார்கள்.

ஆண்டவர் தாமே தமது பிதாவை நோக்கி ஜெபிக்க வேண்டியவராயிருந்தால் நாம் கடவுளை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# யார் உன்னுடைய எஜமான்? உன் வேலைகள் எப்படிப்பட்டவை?

(அருள்திரு. கலாநிதி ஜேம்ஸ் மேதர் — மறுபிரசுரம்)

(முற்றொடர்)

(3) நாம் செய்யும் வேலைகளைக் கடவுளுடைய துணையின்றிச் சரியாய் அல்லது நன்றாய்ச் செய்ய முடியாது என்பதை மனதில் என்றும் பதித்திருக்க வேண்டும்.

'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா' சங்கீதம் 127 : 1 வீட்டைக் கட்டுதல் மேசன், தச்சன், கூலிவேலை செய்வோர், இன்னும் அநேகர் கூடிச் செய்யும் வேலை. ஆனால் இவர்களுள் பிரதானமானவர் கடவுள் என்பதை ஒருவரும் மறக்கக் கூடாது. என்ன வேலையை நீ செய்தாலும் கடவுளுடைய துணையைத் தேடி அதைப் பெற்றுச் செய்தால் அந்த வேலை விசேஷமானதாயும், வித்தியாசமானதாயும் இருப்பது நிட்சயத்தில் நிட்சயம். சமையல் செய்தல், வீட்டைக் கூட்டல், தையல் செய்தல் முதலிய சாதாரணமான வேலைகளும் இந்தப்பெரிய ஆவிக்குரிய விதிக்குள் அடங்கியவை. 'நன்மை மூலனே நம் நேய சீலனே' என்று பாடிக்கொண்டு வீடு கூட்டுகிற ஒரு மாதாவை அறிவேன். அப்படி தங்கள் பற்பல கடமைகளைச் செய்கிற பலர் இருக்கிறார்கள் வேலைகளின் களைப்பு அவர்களுக்கு மிகக் குறைவு என்பது அவர்களின் அனுபவம். பரிசுத்த மாற்கு 16 : 20; i கொரிந்தியர் 3 : 6 - 9; ii கொரிந்தியர் 6 : 1; முதலிய வசனங்கள், நாங்கள் செய்யும் வேலைகளில் கடவுளின் பாகத்தைக் காட்டுகின்றன.

(4) நாம் செய்யும் வேலைகள் மற்றவர்களுக்கு நாம செய்ய வேண்டிய கடமைகள், வேலைகள், கடன்கள் முதலியவைகளில் நாம் எடுக்க வேண்டிய ஊக்கத்தையும், கரிசனையையும் குறைக்க இடம் கொடுக்கக் கூடாது.

சிலர் தங்கள் காரியங்களை மாத்திரம் பார்ப்பதுடன் திருப்தியாயிருக்கிறார்கள், எவ்வளவு நல்லாய் அவ்வேலைகள் செய்யப்பட்டாலும் அவைகளில் கடவுள் திருப்தியாயிருக்கமாட்டார் ஒருவருக்கொருவர் கடனாளிகளாயும் உத்தரவாதிகளாயும் (mutual responsibility) கடவுள் யாவரையும் சிருஷ்டித்திருக்கிறார்.

நல்ல சமாரியனின் உவமை இதற்கு ஒரு திருஷ்டாந்தம். கள்வர் ஒரு மனிதனைக் காயப்படுத்தி திருடியதில் கடவுள் எவ்வளவு விசனப்பட்டாரோ அப்படியே ஆசாரியனும், லேவியனும் தங்கள் வேலைகளை மாத்திரம் செய்கிறவர்களாயிருப்பதில் விசனப்பட்டார். பிறரின் நன்மைக்காக நாம் முயற்சியாயிருப்பதும் அவர்களுடைய வாழ்வில் கரிசனையாயிருப்பதும், நம் யாவருடைய பிறவிக் கடனாயிருக்கிறது.

(5) பிறருக்கு உதவி செய்தல் உதவி பெறும் முழு ஆளுடைய நன்மையையும் நாடித் தேடும் ஊழியராயிருக்க வேண்டும்.

சனசமூக ஊழியம் (Social service) போதாது, முழு ஆளும் இரட்சிக்கப்பட வேண்டும். வறியவர்களுக்கு உணவு, உடை முதலியவை கொடுப்பது மாத்திரம் போதாது. அவர்களுடைய ஆன்ம வறுமை, சரீரத்துக்குரிய வறுமைக்கு அநேகருடைய ஆணிவேராயிருக்கிறது. இயேசு ஆன்மாவை மாத்திரம் இரட்சிக்கிற இரட்சகரல்ல; அவர் மனிதனுடைய சீவியத்துடன் சம்பந்தப்பட்ட சகல பாகங்களையும் இரட்சிக்கிறவர். நாம் பிறருக்குச் செய்யும் பணிவிடைகள் சரீரத்துக்கடுத்த உதவிகளுடன் நிற்கக் கூடாது. இயேசு செய்த அற்புதங்களைப் பாருங்கள். சரீர சொஸ்தத்தைக் கொடுப்பதுடன் கடவுளுடன் பாவிக்க வேண்டிய சம்பந்தங்களையும் ஒன்றாய்ச் சேர்த்தார். பரிசுத்த மாற்கு 2. 5, 13, பரிசுத்த யோவான் 9 : 6, 37 - 38 பாருங்கள் நீ செய்யும் சகல வேலைகளும் உன்னுடைய பரம எசமானிடம் மற்றவர்களை நடத்தும், சம்பந்தப்படுத்தும் பெரிய இலக்குள்ளதாயிருக்க வேண்டும். இவ்விலக்குள்ளவர்களுக்கு பரம எசமான் சாதாரணமானவைகளை அசாதாரணமானவைகளாக மாற்றுகிறார். (He turns the ordinary into extraordinary; He turns the common into uncommon.) இயேசு பொதுவானவைகளை அபூர்வமானவைகளாக மாற்றுகிறார். தச்சுத்தொழிலிருக்கும் மேசை மாத்திரமல்ல, குசினியிலுள்ள அடுப்பும் பிரசங்க பீடங்களாகத் திரும்பி, கடவுளுக்கு மகிமை கொண்டுவரும் முயற்சிகளாக எங்கள் நல்ல எசமான் பிரயோகிக்கிறார்.

உன்னுடைய எசமான் கர்த்தர். உன் எல்லா வேலைகளும் நீ அவருக்குச் செலுத்தும் உன் காணிக்கை என்று நீ சிவிக்க வேண்டும்.

பிரசங்கி 9 : 10.

---

## நன்றி செலுத்தும் ஆராதனை

புங்குடுதீவைச் சேர்ந்தவராய் கோலாலம்பூரிலே அநேக ஆண்டுகள் வைத்தியராகக் கடமை பார்த்துச் சென்ற ஏப்பிரல் மாதம் பத்தாம் திகதியன்று அங்கேயே மரணமான டாக்டர் அமரசிங்கம் எட்வேட் துரைசாமி அவர்களின் சீவியத்துக்காக நன்றி செலுத்தும் ஓர் ஆராதனை இம்மாதம் 8 ஆம் திகதியன்று மருதனார்மடம் கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தின் சிற்றாலயத்திலே நடத்தப்பட்டது கனம் K. S. ஜெயசிங்கம் அவர்கள் கனம் சாம் அல்பிறெட் அவர்களின் உதவியுடன் ஆராதனையை நடத்தினார்கள். திரு. V. R. அமரசிங்கம், திருமதி கமலமலர் அரியரத்தினம் ஆகியோர் வேதப்பாடங்கள் வாசித்துதவினர். குடும்பத்தினர் விசேட பாட்டுக்கள் பாடினர்.

இளைப்பாறிய அத்தியட்சர் மகாகனம் ச. குலேந்திரன் அவர்கள் பிரசங்கம் செய்தார்கள். தமது பிரசங்கத்தில் டக்டர் துரைசாமி அவர்களின் குணதிசயங்களைப் பற்றியும் பாராட்டிப் பேசிய அத்தியட்சர் அவர்கள் டக்டர் துரைசாமி அவர்களிற் காணப்பட்ட குணதிசயங்களில் தலைசிறந்தது எதுவெனக் கேட்டால் எதையும் குறிப்பாகச் சுட்டிக் காட்ட முடியாது; எல்லாமே தலைசிறந்த குணங்கள் எனக் கூறினார்கள். எனினும் தமது பிறப்பிடமாகிய புங்குடுதீவிலும் தாய்நாடாகிய இலங்கையிலும் அவர் கொண்டிருந்த பற்று! சபையிலும் அதன் கருமங்களிலும் அவருக்கிருந்த வைராக்கியம்; தாழ்மையும் மற்றவர்க்கு முன்மாதிரியுமாய் விளங்கிய அவருடைய சீவியம் ஆகியவை விசேஷமான பாராட்டுக்குரியவை எனக் குறிப்பிட்டார்கள்.

திருமதி துரைசாமி அவர்களும் இவ்வாராதனையிற் சமுகமாயிருந்தார்கள். ஆராதனையைத் தொடர்ந்து சமுகமாயிருந்த அனைவரும் ஒரு தேநீர் உபசரணையில் பங்குபெற்றேகினர்.

## பிள்ளைகள் விழா பரிசுகள் வழங்கல்

1976 ஆம் ஆண்டின் ஓய்வுநாட் பாடசாலைப் பரீட்சைகள்।

பின்வரும் பிள்ளைகளுக்குப் புத்தகப் பரிசுகள் வழங்கப்பட்டன।

சிரேஷ்ட வகுப்பு :—

முதற்பரிசு। தேவராணி நவரத்தினம் — ஏழாலை தெற்கு

இரண்டாம் பரிசு: சுதந்திரா துரைசிங்கம் — உடுவில்.

மூன்றும் பரிசு: J. A. ஜீவநேசன் — ஏழாலை தெற்கு.

இடைநிலை வகுப்பு :—

முதற் பரிசு: ஷிரப்தி தங்கராஜா — பண்டத்தெருப்பு.

இரண்டாம் பரிசுகள் :
ஷெரீன் பாலரத்தினம் — உடுவில் மெலோனி சுகுணராஜா—மானிப்பாய், ஜோதினி செல்லையா — தெல்லிப்பழை.

கனிஷ்ட வகுப்பு :—

முதற்பரிசு: ஷியாமலா தங்கராஜா — பண்டத்தெருப்பு.

இரண்டாம் பரிசுகள்।
சுதர்ஷினி இராசையா — தெல்லிப்பழை, ஈவோன் குணசிங்கம் — ஏழாலை வடக்கு, நிருபினி நவரத்தினம் — கொழும்பு

பிரதம வகுப்பு :—

முதல் இடங்கள்। கவிதா தயானந்தன் — சாவகச்சேரி. ஜோய் கிருபைரத்தினம் — சாவகச்சேரி.

மூன்றும் இடம்। நிமலராஜ் பாலரத்தினம் — சாவகச்சேரி.

1977 ஆம் ஆண்டின் வேத அறிவுப் போட்டி முடிவுகள் :

பின்வரும் பிள்ளைகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிரேஷ்ட பிரிவு :—

முதல் இடங்கள்: தேவராணி நவரத்தினம் — ஏழாலை தெற்கு, ஷார்மிலா சிங்கம் — உடுவில்.

மூன்றும் இடம்: ஷிரப்தி தங்கராஜா — பண்டத்தெருப்பு.

கனிஷ்ட பிரிவு :—

முதல் இடங்கள்: ஷெரீன் பாலரத்தினம் — உடுவில், கிரிஷாந்தி அரியரத்தினம் — உடுவில்

மூன்றும் இடம்। பிரியாந்தி அரியரத்தினம் — உடுவில்.

---

## ஞான ஒடுக்கக் கூட்டம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி வேண்டிக் கொள்வது எவ்வளவு கூடிய அவசியம்! அன்பு குடும்பங்களிலே நிலவ வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கக் கூடியவர்களாயிருப்போம். மரியாளுக்கும், இயேசுவுக்கும் இடையிலே அப்படியான ஒரு அன்பே நிலைத்திருக்கும். இவைகளெல்லாவற்றையும் உண்டுபடவும் நிலைத்திருக்கவும் செய்யும் பொறுப்பு வீட்டின் மாதாவிலே தங்கியுள்ளது. மரியாளைப் போன்ற தாய்மார் இருக்கும் வீடுகளிலேயே இயேசுவைப் போன்ற பிள்ளைகளை நாம் காணலாம்.

மூன்றாவது உரைக்கு ஆதாரமாக "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" (மத். 27:22) எனப் பிலாத்து கேட்ட கேள்வி எடுக்கப்பட்டது.

இயேசு குற்றமற்றவரெனப் பிலாத்து அறிந்தும் தன் சொந்த அபிப்பிராயத்துக்கும், தன் மனைவியின் வேண்டுகோளுக்கும் தன் இருதயத்தை அடைத்துச் சனங்களைச் சாந்தி பண்ண நாடினான். தன் குற்றத்தைப் பிறர் மேல் போட்டுத் தன் கைகளையும் கழுவி விட்டான். ஆண்டவரைக் குறித்து நமது குடும்பங்களில் என்ன சொல்கிறோம்? பாராமுகம், வேண்டாமவறுப்பு, வெளித்தோற்றமான உறவு கொண்டிருக்கிறோமா? அல்லது அவரே மீட்பரென நிச்சயம் கொண்டு, எந்த நிலையிலும் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறோமா? இது காத்திரமான ஒரு காரியம். தீர்க்கமான ஒரு முடிவுக்கு நாம் வர வேண்டியவர்களாகிறோம். பேதுருவைப்போல, "நீரே கிறிஸ்து" என்று; தோமாவைப் போல, "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அல்லது புனிதர் அகஸ்தினைப் போல "என் ஆண்டவரும் எனக்கு எல்லாமுமானவர்" எனக் கிறிஸ்துவைக் குறித்து நாம் சொல்லக் கூடியவர்களாயிருக்கிறோமா?

பங்கு பெற்ற அனைவருக்கும் மிகப் பயன் கொடுத்த இச்சிறப்புரைகளுடன் மேற்படி ஞான ஒடுக்கக் கூட்டம் முடிவடைந்தது.

---

## யாழ்ப்பாண கிறித்தவ ஐக்கியம் எழுப்புதற் கூட்டங்கள்

18, 19, 20 ஆவணி 1977-ல் நடைபெறும்.

திறிம்மர் மண்டபம், யாழ்ப்பாணம்.

பேச்சாளர் :

கனம் தொமஸ் தங்கராஜ்
விரிவுரையாளர்,
தமிழ்நாட் இறையியல் கழகம்,
மதுரை.

வி கனகசபை, தலைவர். கிங்சிலி தே முத்தையா, செயலாளர்.

---

## உடுவில் பழைய மாணவர் கொண்டாட்டம்

உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் (யாழ்ப்பாணக் கிளை) கொண்டாட்டம் சென்ற 9 ஆம் திகதி பிற்பகல் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. பழைய மாணவி திருமதி J. M. சபாரத்தினம் அவர்களினால் கல்லூரிச் சிற்றாலயத்திலே நடத்தப்பட்ட வழிபாட்டுடன் கொண்டாட்டங்கள் ஆரம்பமாயின. இவ்வழிபாட்டில் திருமதி ஜோ ஆன் ஸ்நைடர் அவர்கள் செய்தி வழங்கினார்கள்.

வழிபாட்டைத் தொடர்ந்து கருமக் கூட்டமும் தேநீர் உபசரணையும் இடம் பெற்றன. கல்லூரி வாத்தியக் கோஷ்டியினரின் பாண்டுவாத்திய இசையுடன் சகல பழைய மாணவரும் அணிவகுத்துச் சென்றது கண்கவர் காட்சியாயமைந்தது. தொடர்ந்து ஒரு நவீன உடைக் காட்சியும் வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திருமதி ஸ்நைடர் அவர்கள் நடத்திய கூட்டுப் பாட்டுக்களுடன் கொண்டாட்டம் இனிது முடிவடைந்தது.

# The Morning Star

**29th July, 1977**

## " Vox populi, Vox dei "

It was truly a historic victory that the United Nationalist Party secured in the first election, held on the 21st inst., of the Republic of Sri Lanka. The party owed its victory chiefly to the tireless efforts of its leader, Mr. J. R. Jeyawardene, a man of indomitable will, undiminishing courage in the face of great odds, and unwavering faith in the cause of Freedom, Democracy, and of the long suffering Common Man of the country. It was not only an unprecedented victory in the history of the U. N. P. and of our country, but, as claimed by a writer in the *Sun*, "in the parliamentary system anywhere in the world". The U. N. P. has secured 139 seats out of the available 166. The election of the two-member constituency of Pottuvil has had to be postponed owing to the death of one of the contesting candidates. This achievement of the U. N. P. has completely routed the United Left Front (It may be mentioned here that no less than two-thirds of its candidates lost their deposits.), and reduced the S. L. F. P. to a mere 8. All the Ministers of the former Government, except the Prime Minister and Mr. Maitrapala Senanayake, who won only by a small majority of 366 votes, have lost their seats.

The speeches, delivered by the Prime Minister, her Cabinet colleagues and other able supporters, in the numerous election meetings throughout the Island, claimed proudly — and rather arrogantly — that they were absolutely sure of being returned to power with an overwhelming majority. How is it that their loud proclamation has not proved true? The reasons are very clear and obvious: the ever spiralling cost of living, the scarcities of essential consumer items like food and clothing, (This was emphasised by a group of voters who went to a polling booth dressed only in amudes.), the nepotism so flagrantly practised by the Government, the corruption that had corroded various Government Departments, specially the Co-operative Department, and Corporations, the dependence of the Premier on the advice of her political appointees, stooges and sychophants, and the supression of individual and collective rights of people, also of freedom and democracy. Incidentally, we should like to refer here to the charges of bribery which had been made against some Members of the last Assembly. The Speaker of the Assembly was expected to study these charges and turn over to the Bribery Department instances, where there were prima facie cases, for necessary action. He took a good deal of time over this, but ultimately turned over a few cases to the Bribery Department. But nothing came out of it even till the dissolution of the Assembly. How swiftly action is taken against small fry!

And, then, Mrs. Bandaranaike treated the National State Assembly and democracy with scant respect. She prorougued the Assembly, when a day had been fixed for the debate on a Vote of No Confidence against the Government submitted by the Opposition, and later, though she herself had announced a date for the reassembling of Parliament, she disselved the Assembly and fixed the date for the new elections. It is still a mystery why she fixed the date for the first meeting of the new Assembly for August 26, one month and five days after elections.

Another cause for the routing of the former Members of the Government Party was their arrogance, ineptitude, discrimination perpetrated on certain groups of people, and mismanagement of the Departments under them. For example, the Land Reform Bill was a historic achievement of the last Government — but its implementation in several cases was actuated by motives of political vengeance and racial discrimination. It was the Minister of Agriculture and Lands that was reported to have declared publicly that Mr. J. R. Jeyawardene would not be allowed to function as Prime Minister, and that Mr. S. Thondaman would be deported to India. Memesis has certainly overtaken the S. L. F. P. Government, the L. S. S. P. and the C. P., which were a vital part of the Government, the former till 1975 and the latter till early this year.

This massive victory of the U. N. P. was not due entirely to the failure of the former Government to discharge its responsibilities justly and rightly, but also to the confidence placed by the people on Mr. Jeyawardene and the reformed U. N. P. Mr. Jeyawardene has not crowed over his victory, but has received it with humility and a sense of responsibility. Speaking at a conference of representatives of the Press, both local and foreign, he is reported to have stressed the onerous responsibility that has fallen on his shoulders, and expressed regret that there was no strong Opposition in the National State Assembly. Such an Opposition is an essential and vital organ of the parliamentary system. He also stated, with genuine sincerity, that the defeat of the experienced, skilled and veteran parliamentarians like Dr. N. M. Perera and Dr. Colvin R. de Silva was a serious loss to the Legislature.

What is more significant and important was the unambiguous statement he made at a meeting of his supporters and his colleagues in Parliament, who had gathered at his home, to greet him on his return from the swearing-in ceremony at the President's house as Prime Minister: **"I am now not the Prime Minister of a party or of a section of the people, but of the whole country."** This bodes well for the country and all its people. The former Prime Minister, in spite of appeal from various sections of the people, unfortunately failed to fill such a role. We hope and pray that Mr. Jeyawardene will live up to this ideal which he has set before himself.

We have no space here to comment adequately on the convincing victory of the T. U. L. F. We shall do that in our next issue. However, we do want to hail the victory of all its candidates in the Northern Province and in three constituencies in the Eastern Province as a great victory. Hereafter there will be only one united group to represent the Tamils in the National State Assembly.

There is an ancient Latin saying: "Vox populi, Vox dei" — "the voice of the people is the voice of God." We cannot, of course, equate or identify always the voice of the people with the voice of God. But we are moved to say that God, the Lord of History, has acted in this critical moment in the history of our country and the Tamils. The voice of the people may well be regarded in this instance as the voice of God.

### On Plantation Workers

*(Contd. from first page)*

(b) The Estate School System should be integrated into the National School System, while, at the same time, respecting the culture, language and heritage of the Plantation Workers.

(c) The "Estate Creche" should be improved to show greater care for respect and love of the Plantation Child. It could be transformed into a Pre-School.

(d) Plantation Workers should be granted *sick-leave* remembering that they are the only group of workers in the country without it. At the time of sickness, when they are most in need, they have neither pay nor sick-leave.

(e) They should be granted a *monthly pay*, since they contribute so much to the economy of the country.

3. While everyone acclaimed the progressive steps of the Land Reform Law and the nationalisation of the Plantations, one cannot but regret that the Plantation Workers seem to have been forgotten altogether since no *land* has been given to them, even if they were Sri Lanka citizens.

While therefore suggesting that the Plantation Workers too be given lands, if possible, one must stress *the urgent duty and responsibility* of those in pewer not to render the Plantation Workers *displaced persons* (D.P.), when the land is distributed to the villagers and not to allow them to be submitted to unnecessary sufferings.

"MAY ALL BEING BE WELL" is one of the greatest wishes of our people. It must be made a reality for each one of them, with a deep sense of gratitude and brotherhood, towards the Plantation Workers.

4. Among the Plantation Workers, there are some who are *in extreme need*: i. e. those left without employment and / or food ration. Malnutrition, and famine make victims among them. In the name of humanity, *maitri* and Justice, please take quick steps to abolish obsolete regulations which make the granting of the Ration Books to them almost an impossibility. Make sure that every Plantation Workers in this country, whether national or not, till he / she remains here, be treated in the best tradition of Buddhist hospitality and maitri and be accorded *the fundamental human rights*, believing that "every person has equal rights".

5. According to the 1975 IWY (International Women's Year) resolution, remove the unjust discrimination by which Plantation Women Wokers are paid ONE RUPEE PER DAY'S WORK LESS THAN MEN even for the same work.

6. While promising our support for the implementation of the Indo—Sri Lanka Agreement as regard, repartiation and the granting of **Sri Lanka** citizenship, let the welfare of both those who remain and those who will go be safe guarded and the process of repatriation be slowed down or speeded up accordingly. A united effort should be made to eliminate every kind of exploitation, everywhere, energetically.

7. For the unity and progress of the Plantation Workers take steps to make the *Trade Unions* less sectional and less politicised. Their only commitment should be to the *Workers Welfare* (W.W.)

8. Finally in a true spirit of democratic socialism, let *PROFITS BE JUSTLY SHARED* with the Plantation Workers who make them. Let the profits be partly used to *improve speedily their living conditions* to assure a more human and human life to each one of them.

*Let the Second Century* of Sri Lanka Tea (1967 — 2067) and Rubber (1976 — 2076) give a more prominent place to the human person and the dignity of the WORKERS and write a history with less cruelties and exploitations and with more humanism, maitri and love for the WELFARE OF ALL and FOR A SRI LANKA UNITED PEOPLE.

**Rev. Fr. Pio Ciampa** s. j.
for "*Estate People's Services*".
Kahawatte.

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 29th July, 1977.